உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] கீலக - பங்குனி - 10—4—69 [ இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## அண்டர் அரசு

மக்கள் இனத்தில் கடவுட் கொள்கை தோன்றிய அன்றே இருதிறக் கொள்கைகள் உளவாயின. என்று சொல்லும்படி தொன்றுதொட்டு இரு பழங்கொள்கைகள் நிலவி வருகின்றன. 'ஒன்று, கடவுளர் பலர்' என்பதும் மற்றொன்று, கடவுளர் பலராயினும் அவர்கட்குத் தலைவனாய் உள்ள முதற்கடவுள் ஒருவனே' என்பதுமாம். 'புத்தேளிர், வானோர், உம்பர், விண்ணோர்' என்றாற் போலும் வழக்குக்கள் 'கடவுளர் பலர்' என்னும், கருத்தினாலும், 'முனைவன், ஒருவன், பெரியோன், நெடியோன், மால், வேந்தன்' என்னும் வழக்குக்கள், 'கடவுளர்

பலராயினும், முதற்கடவுள் ஒருவனே' என்னும் கருத்தினு லும் தோன்றினவாம். ஆகவே, கடவுளரைப் பற்றிய பழங் கதைகளாகிய புராண வரலாறுகள் இவ் இரு கருத்துக்களுள் ஒன்றுபற்றி நிற்கும் என்பது அறியப்படும். அவ்வரலாறுகளுள் இறைவன் நஞ்சுண்ட வரலாறு ஒன்று. இது மிகப் பழமை யானதொன்று; இதன்கண் கடவுளர் அல்லது தேவர் எனப் படுவோருள் நான்முகன் தவிர ஏனை அனைவர்க்கும் தொடர்பு உண்டு. அசுரர்களும் உடன் உளர். இவ்வரலாற்றின் சுருக்க மாவது :—

'தேவர் அனைவரும் கூடித் தாம் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என்பன இன்றி என்றும் ஒரு பெற்றியராய் வாழ வழியாது என்று ஆராய்ந்தனர். அப்பொழுது திருமால், 'பாற் கடலைக் கடைந்து அமிர்தத்தை எடுத்து உண்டால், அந்நிலை கைகூடும்' என்று சொல்லி, அதற்கான உபாயங்களையும் தெரி வித்துத் தாமே முன்னின்று தேவர்களைக்கொண்டு பாற்கடலைக் கடைவித்தார். அவரது சொற்படி தேவர்கள் மந்தர மலையை மத்தாக இட்டுச் சந்திரனைத் தறியாக நிறுவி 'வாசுகி' என் னும் பாம்பைக் கயிறுகச் சுற்றிப் பாற்கடலைக் கடைந்தனர். அதனல் கயிறுகச் சுற்றப்பட்ட 'வாசுகி' என்னும் பாம்பு வலி பொறுக்கமாட்டாது தனது பெரு நஞ்சைக் கக்கிற்று. அதனைக்கண்ட தேவர் அனைவரும் உடனே அந்த இடத்தை விட்டு அப்பால் ஓடினர். திருமாலும் அவர்கள் பின்னேடே ஓடினர். நஞ்சின் வேகமும் உடன் தொடர்வதாயிற்று. அதனல் திருமால் உடல் கருநிறம் பெற்றது. உலகெங்கும் பரவி அனைத்தையும் அழிக்கவரும் அந்நஞ்சினைக் கண்ட தேவர்கள் எங்கும் புகலிடம் இன்றிக் கைலையில் அடைக்கலம் புகுந்து நிகழ்ந்தவற்றைக் கூறிச் சிவபெருமானிடம் முறை யிட்டனர். அவர் அந்நஞ்சு முழுவதும் தம் கையில் ஒரு சிற்றள வினதாய் வந்து சேருமாறு நினைத்து, அவ்வாறே வந்த அதனைத் தம் உள்ளங்கையில் ஏற்று உண்டு கண்டத்திலே நிறுத்தினர். அதனல் அவரது கண்டம் நீல நிறத்தை அடைய, 'நீலகண்டர்' என்ற பெயரும் அவருக்கு உண்டாயிற்று. அதன்பின் தேவர்களுக்கு அமுதம் கிடைக்கும் வரத்தைச் சிவ பெருமான் அளித்தருள, தேவர்கள் சென்று திருப்பாற் கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்து உண்டு அமரராய் (என்றும் இறவாதவர்களாய்) வாழ்கின்றனர்' இப்பெருங்கதையின்

இடையிடையே இணைத்துச் சொல்லப்படும் வேறு பல கதைகளும் உள.

இவ்வரலாற்றில், 'தேவர்கள் பலர் உளர்' என்பதும் 'அவர்கள் அனைவரும் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என்பவற்றை உடையவர்' என்பதும், 'சிவபெருமான் அமுதம் உண்ணுமையேயன்றி நஞ்சினை உண்டும் இறவாது என்றும் ஒரு பெற்றியனாய் உள்ளான்' என்பதும் ஆகிய கருத்துக்கள் தெளிவாய்ப் புலப்படுகின்றன. அமுதம் உண்டது செயற்கையே யாதலாலும், செயற்கை நீடு நில்லாது ஆகையினாலும், தேவர்களை 'அமரர் எக்காலத்தும் இறவாதவர்' - என்பது உபசாரமாய், 'பல்லாண்டுகள் வாழ்வோர்' என்னும் பொருளே தந்து நிற்கும் என்பது இனிது விளங்கும். இதுபற்றியே கந்த புராண ஆசிரியர்,

"அச்சு தன்அயன் அமரர்ஆ கியபெயர் அவர்க்கு
நிச்ச யம்படு முகமனே"

என்று கூறினர். ( அச்சுதன் - அழியாதவன். அயன் - பிறவாதவன். )

சிவபெருமான் நஞ்சுண்ட வரலாறு மிகப் பழையகாலத்திலிருந்தே சொல்லப்பட்டுவரும் வரலாறு. புறநானூற்றுப் பாடல் ஒன்றில் ஔவையார், 'அதியமான்' என்னும் வள்ளலை வாழ்த்துமிடத்தில்,

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே"

என்று வாழ்த்தினமை காணப்படுகின்றது. இதனுள், "நீல மணிமிடற்று ஒருவன் போல" என்ற குறிப்பு, 'சாதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும் நிலைபெற்றிருந்தாற்போல நீயும் சாவாதிருத்தல் வேண்டும்' என்பது என அதன் உரையாசிரியர் விளக்கினர். அதனால், 'ஏனைய தேவரெல்லாரும் சாவாது நிலைபெற்றிருத்தற்குக் காரணமாகிய அமுதத்தை உண்டும் சாவாது நிலைபெற்றிலர்' என்ற குறிப்பும் நன்கு பெறப்படுகின்றது. "கறை மிடறு அணியலும் அணிந்தன்று; அக்கறை

மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே'', ''ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை - மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்'' என்று அந்நூற்கடவுள் வாழ்த்து முதலிய பிற பாட்டுக்களிலும், வேறுபல பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிவபெருமானது நீலகண்டம் சிறந்தெடுத்துப் புகழப்படுகின் றது. அதற்குக் காரணம் அந்நீலகண்டம், அழிவின்மையும், பேரருள் உடைமையும் ஆகிற இறைமைத் தன்மையை இனிது விளக்கிநிற்பது என்னும் கருத்தேயாம்.

திருவள்ளுவர், 'கண்ணோட்டம்' என்னும் அதிகாரத்துள் ''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க — நாகரிகம் வேண்டுபவர்'' என்று கூறியிருத்தல் யாவரும் அறிந்தது. 'மிக்க கண்ணோட்டம் உடையவர், தமக்கு நட்பாயினர் ஒரு காரணம் பற்றித் தம் எதிரே ஓர் உணவில் நஞ்சைக் கலந்து கொடுத்து, இதனை நீர் எமக்காக உண்ணுதல் வேண்டும் என்று கூறினராயின், அதனையும் மறுக்காமல் உண்பர்' என்பது அக்குறளின் பொருள். இவ்வாறான ஒரு கருத்தைத் திருவள்ளு வர் கூறுதல் யாதேனும் ஒரு மரபுபற்றியதாதல் வேண்டு மன்றித் தாமே ஒன்றை அவ்வாறு படைத்துக்கொண்டு கூறி னர் என்றல் பொருந்துவதன்று. ஏனெனில், அவர் பொய்யில் புலவராதலின், இன்னோரன்னவாகச் சிலவற்றைத் தாமே படைத்துக்கொண்டு கூறுர் ஆகலின். ''முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் — நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'' என்னும் நற்றிணைப் பாட்டுத் திருக்குறளை மேற்கோளாகக் கொண்டு செய்யப்பட்டதாம். ஆகவே, இம்மரபு சிவபெருமான் நஞ் சுண்டமை கூறும் வரலாறு பற்றி வந்ததேயாம். சிவபெரு மானுக்கு, 'அங்கணன்' என்ற ஒருபெயர் வழங்குதல் இங்கு அறியத்தக்கது.

அம் கண்ணன் - அழகிய கண்ணை உடையவன். புறத் தோற்றம் பற்றிப் பார்க்குமிடத்துச் சிவபெருமானது கண்களை 'அழகுடையன' என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், அவ ருக்கு உள்ள மூன்று கண்களும் மூன்று வகையாய் அமைந் தவை. வலக்கண் சூரியன்; இடக்கண் சந்திரன்; நெற்றிக்கண் அக்கினி; அது மேல்நோக்கியிருப்பது. இதனைச் சிவப்பிரகாசர், 'கண்களோ ஒன்று காலையில் தோன்றும் (மாலையில் தெரியாது), மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும் (பகலில் தெரியாது), பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்' (திறக்க முடியாது)

என்று நகைச்சுவையாகக் கூறினர். இங்ஙனம் மாறுபட்ட கண்களை உடைமை பற்றிச் சிவபெருமானுக்கு வடமொழியில் 'விருபாக்ஷன்' என்ற ஒரு பெயர் சொல்லப்படுகின்றது. ஆகவே, புறநோக்கில் பார்க்கும் பொழுது சிவபெருமானை 'அங்கணன்' என்பதற்கில்லை. எனவே, அகநோக்குப்பற்றியே அவருக்கு அப்பெயர் சொல்லப்படுகின்றது என்பது தெளிவு.

அஃதாவது, "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம், அஃ தின்றேல் புண்ணென்றுணரப் படும்" என்றும் "கண்ணோட் டம் என்னும் கழிபெருங் காரிகை" என்றும் (காரிகை-அழகு) கூறுவர் ஆதலாலும், அக்கண்ணோட்டத்தின் மேல்எல்லை, நட்டோர் நஞ்சு கொடுப்பினும் மறுக்காமல் உண்பதே ஆதலா லும்; அவ்வாறுநஞ்சுண்டவனுகக்கூறப்படுபவன்சிவபெருமானே ஆதலானும் அவன் ஒருவனுக்கே 'அங்கணன்' என்றபெயர் உரியதாயிற்று. எனவே, இப்பழைய வரலாற்றினால் பண்டைய மக்கள் சிவபெருமானை எத்தகையோனுகக் கருதினர்—என்றும் அழியாது நிற்றலும் பேரருள் உடைமையும் ஆகிய இறைமைக் குணத்தை முற்ற உடைய பெருமான் என்று கருதினர் என்பது நன்கு விளங்கும். இதுபற்றியே திருநாவுக்கரசர் தமது தச புராணத் திருப்பதிகத்தில் முதற்கண் இந் நஞ்சுண்ட வர லாற்றை எடுத்தோதி, 'அப்பெருமானன்றோ மேலாய தேவர்க் கும் மேலாய தேவன்' என்பதை உணர்த்தியருளினர். அத் திருப்பாடல்,

'பருவரை ஒன்று சுற்றி அரவங்கை விட்ட
இமையோர் இரிந்து பயமாய்த்
திருநெடு மால்நி றத்தை அடுவான் விசும்பு
சுடுவான் எழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றி தற்கோர் பிதிகாரம் ஒன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமல் உண்ட
அவன்அண்டர் அண்டர் அரசே."

என்பது. (பிதிகாரம் - மாற்றுச்செயல். அண்டர் அண்டர் அரசு-தேவருக்குத் தேவராய காரணக்கடவுளர்க்கும் கடவுள். எனவே, அண்டர் அனைவர்க்கும் அரசனுய சிவபெருமானது நித்தியத் தன்மையையும், பேரருட்டிறத்தையும் இதனால் இனிது உணர்ந்து உய்தல் தக்கதாகும்.

உ

குருபாதம்

## குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

### "மனக்கவலை மாற்றல்"

பல்வேறு வகைப்பட்ட பிறப்புக்களில் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் மனக்கவலை இருந்தேவருகின்றது. அவைகளில் மக்களிடையே உள்ள பல்வேறு வகை மனக் கவலைகளை நாம் நன்கு உணர்கின்றோம்.

> "ஒருபொழுதும் வாழ்வ தறியார் ; கருதுப
> கோடியும் அல்ல பல"

என்னும் குறள், மக்களது கவலையின் அளவின்மையையே குறிக்கின்றது. அக் கவலைகளின் வகைகளுள் சிலவற்றை எடுத்துக்காட்டும் முகத்தால் பரிமேலழகர் மக்கட்கு உளவாகும் கவலைகட்கு அளவின்மையை அக்குறளின் உரையில் இனிது விளக்கியுள்ளார்.

> "உண்பது நாழி ; உடுப்பது நான்குமுழம் ;
> எண்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்புதைந்த
> மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
> சாந்துணையும் சஞ்சலமே தான்"

என்பது ஔவையார் வாக்கு. திருவள்ளுவர், 'வாழ்க்கையே நிலையில்லாதது; அவ்வாறிருக்க, அதனை அடிப்படையாக வைத்து மக்கள் தங்கள் மனக்கோட்டையை மிகமிகப் பெரிதாகக் கட்டுகின்றனர்' என்பதற்கு, "ஒருபொழுதும் வாழ்வது அறியார்" என்று கூறினர். ஔவையார், 'வாழ்கின்ற காலத்திலும் தேவைப்படுவன நாழியரிசியும், நான்கு முழச் சீலையுந் தானே? இதற்கு ஏன் ஏராளமான மனக் கோட்டை?' என்று வினவும் முறையில், "உண்பது நாழி ; உடுப்பது நான்கு முழம்" என்று கூறுகின்றார். தாயுமானவரும், "ஆசைக்கொரளவில்லை" என்னும் பாடலில் ஆசையின் பெருக்கத்தைப்

பலவகையாகக் குறிப்பிட்டு, 'ஆசை எவ்வளவு இருந்தால் என்ன? அனுபவம் உண்டியும், உறக்கமுந்தானே' என்பதற்கு, "எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவது மாக முடியும்" என்று கூறினர். இருப்பினும் மக்கள் அடையும் மனக் கவலைக்கு ஓர் அளவுண்டோ? 'பட்டினத்தார் பாடல்' என்னும் நூலில் உள்ள ஒருபாடல் யாவரும் அறிந்தது.

"அன்ன விசாரம் அதுவே விசாரம்; அது ஒழிந்தால்,
சொன்ன விசாரம் தொலையா விசாரம்; நல் தோகையரைப்
பன்ன விசாரம்; பலகால் விசாரம் இப் பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம்வைத் தாய்இறைவா கச்சி ஏகம்பனே."

மற்றும் இத்தகைய பாடல்கள் பல.

'இவ்வாறு மக்களது மனத்தை எந்த நேரமும் வந்து வருத்திக்கொண்டிருக்கும் மனக் கவலை நீங்குதற்கு வழியே இல்லையோ? இருந்தால் அவ்வழியாவது யாது? என்று அறிய விரும்பும் விருப்பம் அனைவர்க்கும் உண்டாதல் இயல்பு. அதற்குத் திருவள்ளுவர் கூறுவது ஒன்றே. அஃது, 'இறைவன் திருவடியையே புகலிடமாக அடைவதுதான் உண்மையாக மனக்கவலை நீங்குதற்கு வழி; அது தவிர மற்றெதுவும் அப்பொழுதைக்குச் சிறிது அமைதியை அளிப்பதன்றி, என்றும் இன்பம் பெருகும் இயல்பினோடு ஒருஞான்றும் கவலையின்றி இருக்கச்செய்வதாகாது' என்பதே.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்பதே அவர் அவ்வாறு கூறும் திருக்குறள்.

உவமை இல்லாதான் - ஒப்பில்லாதவன். 'தன்னோடு ஒத்த பொருள் வேறொன்று இல்லாதவன்' எனவே, உயர்ந்த பொருள் இல்லாமையும் தானே பெறப்பட்டது. 'ஒப்பதும், மிக்கதும் இல்லாதவன்' எனவே, எப்பொருளும் அவனுக்குக் கீழ்ப்பட்டதாதல் விளங்கிற்று. எல்லாப்பொருளையும் கீழ்ப்படுத்தி மேல் நிற்கும் அவன் எதனையும் தன் விருப்பப்படியே ஆக்கலும், அழித்தலும் செய்வானாதலின், தன்னை அடைந்த அடியவர்க்கு

எவ்வகைத் துன்பத்தையும் அகற்றி எல்லா இன்பத்தையும் அருள வல்லவனுகின்ருன். ஆகவே, அவனது தாளைச் சேர்ந்தோர்க்கே மனக் கவலையறுதல் முற்றிலும் முடிவ தாகின்றது. பிறர் எல்லாரும், பிற எல்லாமும் தம்மோடு ஒத்தனவும், தம்மினும் உயர்ந்தனவுமாகிய பல பொருள்களை உடைமையால் அவரை அல்லது அவற்றை அடைதல் மனக் கவலையை மாற்றும் வழியாகாதாயிற்று. திருவள்ளுவர், 'தனக் குவமை இல்லாதானது தாளைச் சேர்ந்தார் மனக் கவலை மாற்றுவர்' என்று இவ்வாறு உடன்பாட்டு முறையில் கூருது, '' தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் - மனக்கவலை மாற்றல் அரிது '' என்று இவ்வாறு எதிர்மறை முறையாற் கூறியது, ' மனக் கவலையை மாற்றுதற்கு வழிகள் பல உள ; அவற்றுள் ஒன்று இறைவனது தாளைப் புகலிடமாக அடைதல் ' என்று கொள்ளாமல், ' இறைவனது தாளைப் புகலிடமாக அடைதல் ஒன்றே மனக் கவலையை மாற்றுதற்கு வழி ; அதுதவிர அதற்கு வேருெரு வழியில்லை ' என்று கொள்ளுதற் பொருட்டேயாம். அது பற்றியே பரிமேலழகர், ' அருமை ஈண்டு இன்மை மேல் நின்றது ' எனக் குறிப் பெழுதினுர்.

அஃதாவது, 'அரிது' என்பதற்குப் பொருள், 'பெரும் பான்மை இயலாது; சிறு பான்மை இயலுதலும் கூடும்' என்பது. 'இல்லை' என்பதற்குப் பொருள், 'சிறிதும் இல்லை' என்பது. எனவே, 'தனக்குவமை இல்லாதான் தாளைச் சேராமலே மனக் கவலையை மாற்றிக்கொள்ளுதல் என்பது சிறிதும் இயலாது' என்பதே இக்குறளின் பொருளாயிற்று. 'அரிது' என்பது சில இடங்களில், 'இல்லை' எனப் பொருள் தருதல் உண்டு என்பதற்கு, '' உறற்பால - தீண்டா விடுதல் அரிது '' என்ற நாலடிச் செய்யுட் பகுதியை (109) அவர் எடுத்துக்காட்டியது முற்றிலும் பொருந்துவதே.

> '' நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
> காட்சியின் தெளிந்தனம் '' (புறம் - 192.)

என்றதற்கிணங்க அனைத்தும் வினைவழியே நடக்குமாயினும், அவ் வினை இறைவனை அடைந்தாரை அடைதல் இல்லை

என்பதைத் திருவள்ளுவர் இதற்கு முன்பே "இருள்சேர் இருவினையும்" என்னும் குறளில் கூறிவிட்டார். அதனால், இறைவனது தாளைச் சேர்ந்தார்க்கு மனக்கவலை இல்லை என்பது ஐயமற விளங்குவதேயாம். 'இறைவனை அடைந்தவரே மனக்கவலை மாற்றுவர்' என்றே திருமுறைகளும் முழங்குகின்றன.

"அச்சம்மிலர்" பாவம்மிலர் கேடும்மிலர் அடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றியூரில்
நச்சம்மிட றுடையார்நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சம்முடை அடிகள்திருப் பாதம்பணி வாரே"

"ஆரூர் - தங்கையி லுல்தொழுவார் தடுமாற் றறுப்பாரே"

"கொடிமாடச் செங்குன்றூர்த் - தத்துவனைத் தொழுவார்
தடுமாற் றறுப்பாரே" (சம்பந்தர்)

"கவனஞ் செய்யுங் கனவிடை யூர்தியான்
தமரென் றாலும் கெடுந்தடு மாற்றமே"

"அச்சம் இல்லை நெஞ்சே அரன்நாமங்கள்
நிச்சலும் நினையாய்"

"வானந் துளங்கிலென்! மண்கம்ப மாகிலென்!
மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென்!
தண்டகலும்
மீனம் படிலென்! விரிசுடர் வீழிலென்!
வேலைநஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட
உத்தமர்க்கே"

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற்
றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும்
அஞ்சல்நெஞ்சே!
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா
திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான்
கழலிணையே"

" கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல்
நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறுப்பினும்
பஞ்சம்உண்டென்று
என்னெடும் ஞாளறும் அஞ்சல் நெஞ்சே
இமையாத முக்கண்
பொன்னெடுங் குன்றப் ஒன் றுண்டுகண்டீர்
இப் புகலிடத்தே. " (அப்பர்)

" முன்னை முதற்பிறவி மூதறி யாமையினுற்
பின்னை நினைந்தனவும் பேதுற வும்ஒழியச்
செங்நெல் வயற்கழனித் தென்றிரு வாரூர்புக்
கென் னுயிர்க் கின்னமுதை என்றுகொல் எய்துவதே "

" தண்டேர்மழுப் படையான்மழ விடையான்எழு கடல்நஞ்
சுண்டேபுரம் எரியச்சிலை வளைத்தான்இமை யவர்க்காத்
திண்டோர்மிசை நின்றுனவன் உறையுந்திருச் சுழியல்
தொண்டேசெய வல்லாரவர் நல்லார்துய ரிலரே "

" உம்பரான் ஊழியான் ஆழியான் ஓங்கி மலர்உறைவான்
தம்பரம் அல்லவர், சிந்திப் பவர்தடு மாற்றறுப்பார் "
(சுந்தரர்)

என்றாற்போல்வன காண்க.

" உனக்குப் பணிசெய்ய உன்றனையெந் நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா — மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா
(சொக்கநாத வெண்பா)

என்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவாக்கும், மனக் கவலையை நீக்குபவன் சொக்கநாதனே என்று குறிப்பிடுகின்றது.

இறைவன் திருவடியைப் பற்றினோர் கவலையற்றிருந்தமை யைப் பின் வருவனபோன்ற திருமுறைப்பகுதிகள் இனிது விளக்கும்.

" பண்ணினி வாவிய மொழிஉமை பங்கன்எம் பெருமான்
விண்ணில் வானவர் கோன்விம லன்விடை ஊர்தி
... ... ... ...
அண்ணல் சேவடி அடைந்தனம் அல்லல்ஒன் றிலமே" *

(சம்பந்தர்)

" அஞ்சுவது யாதொன்றும் இல்லை ; அஞ்ச வருவதும் இல்லை"

" நாம் ஆர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"

" என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்;
இருநிலத்தில் எமக்கெதிரா ஆரும் இல்லை ;
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்;
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம் ;
ஒன்றினாற் குறையுடையோ மல்லோம்"

" சிவனே என்னும்-நாவுடையார் நமைஆளஉடையாரன்றே!
நாவலந்தி வகத்தினுக்கு நாத ரான
காவலரே ஏவி விடுத்தா ரேனும்
கடவமலோம்"

" வந்தீர் ஆர் ? மன்னவனு வான்றான் ஆரே ?"

" சிவன்என் சிந்தை சேர்ந்திருந்தான்
தென்றிசைக்கோன் றானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்
குணமாகக் கொள்ளோம்" (அப்பர்)

" திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றன்னி
ஒருவரை மதியா தூறுமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனுய்த் திரிவேன்"

(சுந்தரர்)

---

* இத் திருப்பதிகம் முழுவதும் இவ்வாறே அமைந்து, திருக்கடைக் காப்பும் அல்லல் தீர்ப்பதாகவே உள்ளது.

" தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்திகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம்; யாதும் அஞ்சோம்.
மேவினோம் அவனடியா ரடியா ரோடும்
மேன்மேலும் குடைந்தாடி ஆடு வோமே "

" எங்கெழில்என் ஞாயிறு எமக்கு"

(மாணிக்கவாசகர்)

ஸ்ரீ குருஞானசம்பந்தரும்,

" புசிப்போம் சிவபோகம் பூரணமாய் எங்கும்
வசிப்போம் உலகில் வசியோம்—மூசிப்பின்றி
வாழ்வோம் சிவத்தையுணர் மாதவர்தம் பொன்னடிக்கீழ்த்
தாழ்வோம் எமக்கார் சரி.

என்று தமது கவலையற்ற நிலைமையை அருளிச்செய்கின்றார்.

இறைவன் திருவடியைப் பற்றினோர் எதுபற்றியும் கவலையின்றியிருத்தலேயன்றி, வருகின்ற தீமையும் அவர்கட்கு நன்மையாய் முடியும் என்பதைத் திருமுறைகள் அறிவுறுத்தக் காண்கின்றோம். " செறுவாரும் செறமாட்டார் தீமைதானும் நன்மையாய்ச் சிறப்பதே " என்று திருநாவுக்கரசரும், ' நாள் கோள் முதலிய பலவும் அடியார்க்கு மிக நல்ல ' என்று திருஞானசம்பந்தரும் அருளிச்செய்தார். அதற்கேற்ப அவர்கட்கு வந்த தீமைகள் அவர்களது பெருமை வெளிப்படுவதற்கும், அது வழியாகப் பரசமயம் வீழ்ந்து, சைவசமயம் தழைத்தோங்குதற்கும் காரணமாயின. ஆகவே, தனக்குவமை இல்லாதான் தாள்சேர்தல் ஒன்றே யாவர்க்கும் மனக்கவலை மாற்றி மாண்புறும் இன்பம் எய்தற்கு வழி என்பது அறநெறியிலும், அருள் நெறியிலும் ஒரு பெற்றியாகச் சொல்லப்படுதலை அறிந்து மக்கள் உய்திபெறுவார்களாக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 28, இதழ் 4, பக்கம் 194 இன் தொடர்ச்சி)

## தீக்கை வகை

மாணாக்கன் : தவமும், ஞானமும் குருவருளால் கிடைத்தல் எவ்வாறு ?

ஆசிரியர் : குருமூர்த்திகளாய் உள்ளோர், தம் மாணாக்கர்க்குத் தவத்தையும், ஞானத்தையும் அளிக்கும் முறையே 'தீக்கை' (தீக்ஷை) எனப்படுகின்றது. 'சமயம், விசேடம், நிருவாணம்' எனத் தீக்கை மூன்று வகைப்பட்டது. சமய தீக்கையால் சரியையும், விசேட தீக்கையால் 'கிரியை, யோகம்' என்பவையும், நிருவாண தீக்கையால் ஞானமும் கிடைப்பனவாம்.

மாணாக்கன் : தீக்கை ஒன்றாய் இல்லாது, மூன்று வகைப் பட்டது ஏன் ?

ஆசிரியர் : உயிர்களின் ஆணவமலபரிபாகத்திற்கு ஏற்பச் சத்திநிபாதமும், 'மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்' என நால் வகைப்பட்டு, அவற்றுள்ளும் பல்வேறுவகையாய்ப் படிமுறையாக நிகழும் என்பது முன்பே கூறினோம். சத்திநிபாதத்தின் தன்மைக்கு ஏற்பவே உலகியலில் பற்று நீங்குதலும், மெய்ந்நெறியில் மனம் பற்றுதலும் படிமுறையாக உளவாகும். ஆகவே, சத்திநிபாதம் மந்ததரமாய் நிகழும் பொழுது உலகியற் பற்றுச் சிறிதே நீங்க, மெய்ந்நெறிப் பற்றுச் சிறிதே உண்டாகி, மேன் மேல் படிமுறையாக மிக்கு நிகழும். மெய்ந்நெறியாவது, சிவபெருமானைப் பொதுநீக்கி உணர்ந்து வணங்குவதே யாதலின் ஏனைய எவையும் உலகியலேயாம். வேதம் சிவபெருமானது முதன்மையை ஒருதலையாக வைத்து உணர்த்தாமையாலும் சிவாகமங்களே அதனை அவ்வாறுணர்த்துதலானும், வேதநெறியும் உலகியலேயாகச் சிவநெறியே மெய்ந்நெறியாயிற்று. இதனையே சேக்கிழார்,

" உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும் "

எனக் கூறியருளினர்.

எனவே, சிவபெருமானது முதன்மையைச் சிறிதளவேனும் உணர்ந்து, அவனுக்குத் தொண்டு செய்தலில் சிறிதேனும் விருப்பம் உண்டாகுமாயின், அதுவே சத்திநிபாதத்தின் அறிகுறியாகும் என்பது தெளிவு. சத்திநிபாதத்தின் தன்மைக்கு ஏற்பச் சிவத்தொண்டின்மேல் உண்டாகும் விருப்பத்தின் அளவிற்கு ஏற்பவே, அத்தொண்டாகிய தவமும் ஒன்ருய் நில்லாது, 'சரியை, கிரியை, யோகம்' என மூன்ருய் நின்றது. 'புறத்தொழிலால் மட்டும் சிவபெருமானது உருவத் திருமேனி பற்றிச் செய்யும் தொண்டே சரியை' என்பதும், 'புறத்தொழில், அகத்தொழில் இரண்டாலும் அப்பெருமானது அருவுருவத் திருமேனி பற்றிச் செய்யும் தொண்டே கிரியை' என்பதும், 'புறத்தொழில் இன்றி அகத்தொழிலால் மட்டும் அவனது அருவத் திருமேனிபற்றிச் செய்யும் தொண்டே யோகம்' என்பதும், 'அத்தவமுதிர்ச்சியால் உலகியலை முற்றத் துறந்து, அவனது உண்மை நிலையை உணர்ந்து அதனைத் தலைப்படுதலே ஞானம்' என்பதும் முன்பே கூறினேம். ஆகவே, சத்திநிபாதத்தின் தன்மைக்கு ஏற்ப மெய்ந்நெறி ஒருபடித்தாய் நில்லாது, 'தவமும், ஞானமும்' எனப் பெரும்பான்மையாக இருவகைப்பட்டு, அவற்றுள்ளும் பல்வேறு வகைப்படுதலால், அவற்றைத் தரும் தீக்கையும் ஒன்ருய் நில்லாது மூவகைப்பட்டு, அவற்றுள்ளும் பல்வேறு வகையாய் நிகழும் என்க.

மாணுக்கன் : சத்திநிபாதத்திற்கு ஏற்பவே மெய்ந்நெறி மேற்கொள்ளப்படுதலின், சத்திநிபாதம் வரப்பெற்ருேர், தாமே அந்நெறியைத் தம் தகுதியளவாகப் பற்றி ஒழுகுதற்குத் தடையின்மையின், இடையே 'தீக்கை' என்பது ஒன்று எற்றுக்கு ?

ஆசிரியர் : அறியாது வினவினுய் ! ஏனெனில், இதற்கு விடை முன்பே கூறியுள்ளோம். அஃதாவது, பிறவியிலே கண்ணில்லாதவன் கண்பெற்ருனுயின், பொருள்களைக் காணும் ஆற்றலைப் பெறுவானேயல்லது, 'இஃது இன்னபொருள்' என்பதை உணரும் ஆற்றலைப் பெருன். ஆகவே, முன்பே அதனை அறிந்த ஒருவன் உணர்த்தவே அவன் அதனை உணர்தல் வேண்டும். அதுபோலவே, இயற்கையிலே ஆணவமல மறைப்பால் மறைக்கப்பட்ட அறிவை உடைய உயிர், அம்மறைப்பு நீங்கப்பெற்றபொழுதும் தவத்தின் இயல்பையும், ஞானத்தின்

இயல்பையும் உள்ளவாறு உணரும் ஆற்றலைப் பெறுமேயன்றித் தானே அவற்றின் இயல்பையெல்லாம் உணர்ந்துகொள்ளமாட்டாது. அதனால், அவையனைத்தையும் முன்பே உணர்ந்த ஆசிரியன் அவற்றை உணர்த்தவே உணரும். அவ்வாறு உணர்த்தும் முறையே தீக்கை.

இன்னும், ஆணவமலம் பரிபாகமாகிச் சத்திநிபாதம் வந்தபொழுதும், அது நீங்கும் நிலையைப் பெறுமேயன்றி நீங்கியே விடாது. அஃது எதுபோல எனின், கண்ணில் படர்ந்த படலம் பழுத்துவிடினும், அதனை மருத்துவன் சில செய்கையால் நீக்க நீங்குமல்லது தானே நீங்காததுபோலும். இறைவனது சிற்சத்தி, 'இச்சை, ஞானம், கிரியை' என மூன்றாய் நிற்கும் என்பதைப் பதியியலிற் கூறினோம். அம்மூன்றனுள் கிரியா சத்தி ஆசிரியன் வாயிலாக அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைத் தரும் செய்கையே தீக்கையாகும். 'தீக்ஷா' என்னும் வடமொழிப் பதத்திற்கு, 'அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தை விளக்குதல்' என்பதே பொருள் (க்ஷா - நீக்குதல். தீ - விளக்குதல்). சத்திநிபாதம் வரப்பெற்றோர்க்கும் ஆசிரியன் அருள் இன்றியமையாதது என்பதை உமாபதி சிவாசாரியர் தமது திருவருட் பயனில்,

"எமக்கென் எவனுக் கெவைதெரியும் அவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்"

எனத் தெளிவித்தருளினர். 'உலகியலில் இலக்கியம், இலக்கணம், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், உழவு, வாணிகம், பிற தொழில்கள் முதலியவற்றை அறியவேண்டின், அதனை அறிந்தவர்வழி நின்றல்லது தாமாக அறிய இயலாததாய் இருக்க அவற்றினும் மிக அரியனவாகிய தவத்தையும், ஞானத்தையும் ஒருவன் தானே உணர்தல் எவ்வாறு இயலும்' என்பது இதன் பொருள். எனவே, சத்திநிபாதம் பெற்றோர்க்குத் தீக்கை இன்றியமையாததனை உணர்வாயாக.

## சமய தீக்கை உரிமை

மாணாக்கன்: அங்ஙனமாயின், சமய தீக்கை யாருக்கு உரியது. அதனால் வரும் பயன் யாது?

ஆசிரியர்: சத்திநிபாதத்தின் முதல் நிலை மந்ததரம். அதில் சிவபெருமானது முதன்மையை ஒருவாறு உணரும்

நிலையே கூடுவதாம். அதனால், அப்பெருமானது சிறப்பு (மூல) மந்திரமாகிய திருவைந்தெழுத்தை (பஞ்சாக்கரத்தை)த் தூலமாக உணர்ந்து கணிக்கும் உரிமையும், சிவாகமங்களை ஓதி உணரும் உரிமையும், அவ்வாகமங்களில் சரியாபாதத்தில் நிற்கும் உரிமையும் மந்ததர சத்திநிபாதர்க்குச் சமய தீக்கையின் வழி உளவாகும். வேதத்தை ஓதுதற்கும், வைதிக ஒழுக்கத்தை மேற்கொள்ளுதற்கும் உபநயனம் இன்றியமையாதது போல, சிவாகமங்களை ஓதுதற்கும், சைவ ஒழுக்கத்தை மேற்கொள்ளுதற்கும் சமய தீக்கை இன்றியமையாதது. உபநயனம் பெறாதவன் வேதியன் ஆகாமைபோலச் சமய தீக்கை பெறாதவன் சைவன் ஆகான். ஆகவே சைவ சமயியாகும் உரிமையைத் தருதல் பற்றி இத்தீக்கை, 'சமய தீக்கை' எனப் பெயர்பெற்றது. சமய தீக்கை பெற்றவன், 'சமயி' எனப் பெயர் பெறுவான் என உணர்க.

(தொடரும்)

---

## வருக புத்தாண்டே !

வி. சா. கு.

வருகபுத் தாண்டே வருகபுத் தாண்டே
உலகம் வாழ்ந்திட ஒற்றுமை வளர்ந்திட
பசிப்பிணி நீங்கிட பண்புகள் நிறைந்திட
வருகபுத் தாண்டே வருகபுத் தாண்டே
மழைவளம் பெருகிட மாநிலம் தழைத்திட
விளைபொருள் மலிந்திட விலைகள் வீழ்ந்திட
வருகபுத் தாண்டே வருகபுத் தாண்டே
போர்செயல் தவிர்ந்திட பொய்கள் தொலைந்திட
வஞ்சகம் களவுகள் வையகத் தொழிந்திட
வருகபுத் தாண்டே வருகபுத் தாண்டே
வள்ளுவர் கண்ட வாய்மை வாழ்வு
வையகமெங்கும் வளர்ந்து பரவிட
வருகபுத் தாண்டே வருகபுத் தாண்டே
சமய நெறிகளைச் சார்வெனக் கொண்டு
மக்கள் கடவுளின் மாண்புறும் அருள்பெற
வருகபுத் தாண்டே வருகபுத் தாண்டே!

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 28, இதழ் 4, பக்கம் 210 இன் தொடர்ச்சி )

## (15) மேருவைச் செண்டாலடித்தது

அண்டர்கள் அஞ்ச அமரர்கோனை அரசர்கோன் வளை எறிந்து வென்றவண்ணம் கண்டோம். இனிக் கன்னிநாடன் மேருவைச் செண்டாலடித்துச் சேமவைப்பெடுத்த செயலை விளக்குவோம்.

பொதிய மலையின் முனிவன் அகத்தியன் சொன்னபடி சோமவார விரதத்தை அணுவும் பிசகாமல் அனுசரித்த உக்கிர குமார பாண்டியனுக்கு, அந்நோன்பின் பயன் கனிவதேபோல் காந்திமதியின் திருவயிற்றில் 'வீரபாண்டியன்' தோன்றினான். புதல்வன் திருமுகங்கண்டு பொலிந்திருக்கும் நாளில் பருவநிலை மாறவே மீண்டும் மழைவளங் குன்றியது பாண்டியநாட்டில். விளைவன விளையாததனாலே சிறப்பொடு பூசனை செல்லவில்லை, மழைவளம் மாறக் காரணம் கேட்ட வழுதியிடம் கணிவர்கள் (சோதிடர்கள்) பிற கோள்கள் இரவியை உற்று நோக்கி நிற்றலால் இன்னும் ஓராண்டிற்கு மழைபொழியாது என்றனர். இச்செய்தி கேட்டு மீனவன் மனம் மிக நொந்தான். மகவின் நோய் கண்டு தாய் வருந்துவதுபோலத் துயரில் மூழ்கினான்.

மகவுறு நோயை நோக்கி வருந்துறு தாய்போன் மன்னன்
பகவுறு மதியஞ் சூடும் பரஞ்சுடர் முன்போய்த் தாழ்ந்து
மிகவுறு பசியால் வைய மெலிவதை யைய வென்னுத்
தகவுற இரங்கிக் கண்ணீர் ததும்பநின் றிரந்துவேண்ட,

அண்ணலின் அமுதவாக்கு அவனது ஐயத்தைப் போக்கியது.

## இறைவனின் கருணையும் இன்தனப் புதையலும் :

தள்ளரும் துயரில் மூழ்கிய தமிழரசன் நிலைகண்டு தழற்புரை சுடர்க்கடவுளெனும் தயாபரன் அவன் கனவிலே சித்தவேடங் கொண்டு வந்தான். 'அடற்கதிர் வேலோய்! அழிவுறேல்! மாரியின் கருணை பருவத்தால் மாறியது. அதற்காக நைந்துருகாமல் நீ படைகொண்டு சென்று மேருவின் இடைப்பட்ட புதையலைப்பெற்றுக்கயற்பொறி பொறித்து விறலுடன் விரைந்துவா' என்றருளினன். ஆணவங்கொண்டு நிற்கும் மேருவைச் செண்டால் அடித்துச் சேமச் செல்வம் பெறுக - என்ற அண்ணலின் வாக்கைச் சிரமேற்றுங்கிப்பொன்னறை பொதிந்த பாறையை நோக்கிப் படைகளை நடத்தினன் பாண்டியன். தென்கடல் வடபால் நோக்கிச் செல்வதுபோலத்தென்னவன் படை விரைந்து - யாவையும் ஈன்றுள் தன்னையின்ற பொன்னிமயங்கண்டு நின்றது.

## மேருவும் மீனக் கொடியோனும் :

வரைகளுக்கரசனை மேருவைக்கண்டு மிகப் பண்பொடு பணிந்து பாண்டியன் 'எந்தையாம் நீலகண்டன் கைமேவு கோலச் சிலையே! வானக் தைவரும் கோளும், நாளும் தழுவிச் சூழும் தெய்வத வரையே! தேவராலயமே!' என விளித்தும் மலையரசன் வெளிவராமல் காலந்தாழ்த்தினன். உக்கிரப் பெருவழுதி சினத்தால் கண் சிவந்து அசலத்தின் ஆணவம் தணிக்கத் தன் கைச்செண்டால் அதன் சிகரமீதடித்தான். அடிக்கவும் அசையா மேரு அசைந்தது. பந்துபோலத் துடித்தது. தண்ணெனச் சுரர்பயில் மாடப்பந்தி வெடித்தது. பானுமண்டலம் தூளாய்ப் பொடிந்தது.

மேருவின் பக்கமுள்ள எட்டு மலைகளும் (நிடதம், ஏமகூடம், இமயம், நீலம், சுவேதம், சிருங்கம், கந்தமாதனம், மாலியவான்) மேருவிற்கு ஆதரவாகச் சூழ்ந்து நிற்கும் மந்தரம் - கந்தமாதனம் - விபுலம் - பார்சுவம் என்ற அடைகல் நான்கும், மற்றைய கிடங்கர் - பொழில் - தருக்கள் எல்லாம் சவித்தன. உடையவன் இடையூறுற்றபோது அடுத்தவர்கள் உவகையா உறுவார்கள் ?

அடியுற்றடங்கிய மேரு எட்டு மலைகளையே எட்டுத் தோள்களாகக் கொண்டு - நான்கு முடியும் - சோதியுடைத் தனிக் குடையும் கொண்டு நாணி எழுந்து நடந்துவந்தான்.

**வரவு தாழ்க்கக் காரணம்:**

தனது விளியோசை கேட்டவுடன் வாராமல் இத்தனை பொழுது காலம் தாழ்த்துவரக் காரணமென்ன என மாறன் வினவ, 'பெருமானே! மீனெடுங்கண்ணியொடும் கூடிய பைத் தலை அரவம் பூண்ட பரமனை இப்படிவங்கொண்டு பரவிடும் நியமம் பூண்டேன். ஆனால் இன்று பெண்ணொருத்தியின் மைய லில் சிக்கிக் கருத்தழிந்தேன். அம் மங்கை காரணமாக மன்றுளாடிய மலர்ப்பாதங்களை வழிபடவும் மறந்தேன். அதற் குத் தண்டனையாக உனது திருக்கரத்தால் செண்டடிபட்டு செருக்கடங்கினேன். இதற்குப் பலனாக யான் உனக்குச் செய்வது ஏதேனுமுண்டோ? இருப்பின் நவின்றிடுக' என்று மேருத் தலைவன் கேட்கவும் - புதையல் வேண்டிவந்த தன் எண்ணத்திற்கு உருக்கொடுத்தான் உம்பர்கோனை வாகை கொண்ட உக்கிரவர்மன்.

'பொன்னவிர் தேமாவின் நிழலிலே அப்பொன்பொதிந்த பாறையுண்டு' என்று மேரு அங்கையாற் சுட்டிக்காட்டிய இடம் சென்று வழுதி தன் அவா அளவிற்குகப் பொன்னை முகந்து கொண்டு தன் பெயர் இலச்சினையை அங்கே பொறித்து மூடி வைத்தான். பொன் மலையிடம் விடைபெற்றுத் தன்னூடு மீண் டான். தராதிபர் ஏத்தி வணங்கக் கொங்கலர் கோதைமாதரும் குவவுத்தோள் குமரரும் மங்கலங்கூற ஆலவாய்க் கோயில் நண்ணி பரமனடி பணிந்து உருகிநின்றான்.

சேமவைப்புக் கொண்டு, தென்புலம் - ஒக்கல் - தன்மனை - விருந்து - தெய்வம் இவை காத்துவரும்நாளில் அம்பலவன் அருள் சிறப்பதுபோல வானம் மழை பொழிந்து - நாடு வளமுற்றது. வற்கடந்தொலைந்தது. உய்வினைப் பெற்ற உயிர்க்குலம் தழைத் தது. உக்கிரகுமார பாண்டியன் தன் புதல்வனும் வீரபாண் டியன் திருப்புயத்தில் புவிப்பொறை சுமத்தி பூரண ஞான மருளும் புனிதனின் திருவடி நிழலிற் கலந்து களித்தான்.

## (16) வேதத்திற்குப் பொருள் அருளிச்செய்தது

ஓர் ஊழி முடிவில் ஐம்பெரும் பூதங்களும் நிலைகலங்க ஈரே மூலகமும் உம்பர்வான் பதங்களும் உதித்தவாறு ஒடுங்கின. அப்பொழுது வேதங்களும் மறைந்தன. அதன்பின்பு உலகம்

கதிரவன்முன் கமலமென மலர்ந்தது. பண்டுபோல் பின்னும் முத்தொழில் நடத்த இறைவன் திருவுள்ளங்கொண்டு திருமாலைப் படைக்க அவருடைய உந்திக்கமலத்திலிருந்து தோன்றிய கஞ்ச மலர்க் கடவுள் மூன்றுலகங்களையும் படைத்தான். வானவர்க் கருளிய தேவதேவனின் திருவாக்கினின்றும் எழுந்த பிரணவத்தி லிருந்து வேதங்கள் தோன்றின. நைமிசாரண்ய வாசிகளான கண்ணுவர் - கருக்கர் ஆகிய முனிவர்கள் வேதங்களை ஓதி அவற்றின் பொருளறியாது மயங்கினர்.

### அரபத்தரின் வருகை :

அருமறைப் பொருள் விளங்காது அலமந்து கொண்டிருந்த முனிவர்களின் முன்னே அரபத்தர் என்ற முனிவர் வந்தார். வேதத்தை, அவா, வெறுப்பிகந்த பண்பினீர்! இந்த முகவாட்டம் ஏன் என்று அவர் கேட்டபோது நைமிசாரண்ய முனிவர்கள் அவருடைய திருவடியைத் தலையில் சூடி 'மாயை வென்ற மகேசன் அருளிய மறையின் பொருள் விளங்காமல் மயங்கு கிறோம்' என்றனர். அரபத்தர் அவர்களை நோக்கி 'வேதஞ் செப்பிய சிவபரஞ் சுடரே அதன் பொருளையுமருளவேண்டுமே யல்லாது வேறென்ன உபாயமுளது! எனவே நீங்கள் எண் தோள் முக்கண் எம்மானைப் பணிந்து வேண்டுங்கள்' என்று நெறிகாட்டினர். சிவத்தலங்கள் எல்லாவற்றினும் சிறந்த மதுரைப்பதியிலுள்ள வடவிழலமர்ந்த வான் பெருஞ் சோதியை (தட்சிணாமூர்த்தி) அகமும் முகமும் மலர அரபத்தர் காட்டிய வழிப்படி வணங்கினர்கள் முனிவர்கள்.

### குருமூர்த்தியாக வந்தருளல் :

சிதளப் பளிக்கு மேனியும் செவ்வாய் மலரும் பங்கயச் செங்கரம் நான்கும், முக்கணும், தன்விழிவடமணிந்த (உருத் திராக்க மணி மாலை) திருமார்பும் - பாத தாமரை மலர்களும், புவியில் வாழ்வார் மலர்ந்திட ஞானபோதமுத்திரையும் தாங்கிய மேதா தட்சணாமூர்த்தியின் திருவடிகளைப் பணிந்த தவர்களுக் கருளும் வண்ணம் இறைவன் எண்ணான்கு ஊனமில் இலக்கண உருட்போடு அகவை நானான்கான மறையவனாய்வந்தான்.

" ஏதமில் பவித்திரம் வலக்கர விமைப்பப்
போதம்வரை புத்தக மிடக்கையது பொற்ப
ஓதியுண ராதலறி யோலமிடும் வேதம்
பாதுகைக ளாகியிரு பாதமலர் சூட "

வந்த இளையோன் முனிவர்களை நோக்கி 'யாது வேண்டினீர்!' என வினவினன். கலைகட்கெல்லாம் உறைவிடமாகி வேதவிளை பொருளாய் வந்த வேதியா சரணம் என்று அவனடி தாழ்ந்து வேதப் பொருள் அருளவேண்டும் என விண்ணப்பித்தனர்.

## வேதப் பொருளருளிய வித்தகன் :

ஆலந்தரித்த ஆலவாய்ச் சொக்கலிங்கத்தின் முன்னே நின்று 'இப்பெருமானே வேதங்களனைத்திற்கும் ஆதிகாரணப் பொருளாய் சுயம்பிரகாசமாய் விளங்குபவன். இம் மூர்த்தியின் திருவுருவமே வேதமாகும். வேதமும் ஒன்றே - வேதப் பொருளும் ஒன்றே. அவ் வேதம் சாகைகளின் பேதத்தினால் அனந்த பேதமாய்த் தழைத்துள்ளது. இச் சொக்கலிங்க மூர்த்தியின் வடிவத்தில் கீழ்ப்பாகம் ஆன்மதத்துவமான பிரமனின் பாகம். நடுப்பாகம் வித்தியா தத்துவமான திருமாலின் பாகம் நுனிப்பாகம் சிவதத்துவமான ருத்ரனின் பாகம். இம் மூவகைத் தத்துவங்களிலிருந்துதான் எல்லாத் தத்துவங்களும் தோன்றும்.

சிவபெருமானின் உச்சிமுகம் ஈசானமுகமாகும். அங்கிருந்து சிவாகமங்கள் இருபத்தெட்டும் தோன்றின. கிழக்குமுகம் - தற்புருடமுகம். இதிலிருந்து இருபத்தோரு சாகைகளோடு கூடிய இருக்குவேதமும், தெற்குமுகமான அகோரமுகத்திலிருந்து நூறு சாகைகளோடு கூடிய யசுர் வேதமும், வடக்குமுகமெனும் வாமதேவ முகத்தினின்றும் ஆயிரம் சாகைகளோடு கூடிய சாம வேதமும், மேற்கு முகமாகிய சத்தியோஜாத முகத்திலிருந்து ஒன்பது சாகைகளோடு கூடிய அதர்வ வேதமும் தோன்றின,

வேர் பருகும் நீரினால் கிளைகள் தழைப்பது போல முதற் பொருளாம் இவ்விறைவனுக்கூட்டும் அவியுணவால் பிற தேவர்கள் நிறைவுறுவர். நித்தியம் - நைமித்தியம் - காமியம் என்ற மூன்று கருமங்களுக்கும், இன்ப வீடு பேறுகளுக்காகச் செய்யும் சிவார்ச்சனைகளுக்கும் இச் சிவலிங்கமே காரணமாயுள்ளது.

தெளிவான போகத்திற்கும் வீட்டிற்கும் காரணமான சிவமயமா மறைப்பொருளை மயக்கமற உணர்த்தினோம். சிவனுக்கு மேலோர் பொருளில்லை என உணர்க' என்றுணர்த்தி முனிவர்களின் முதுகைத் தன்னருட்கரத்தால்வருடிச் சிவலிங்கத்துள்ளே மறைந்தான் அருள் நெறி காட்டிய ஆசிரியன்.

( வளரும் )

# அழுக்காறும் அழுக்காருமையும்

புலவர். திரு. திருமேனி நாகராசன்

**முன்னுரை :**

மாந்தரின் வாழ்க்கைக்கு உறுதிபயப்பது அறமாகும். அறமாவது திருக்குறள் முதலான நூற்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். விதித்தன: அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி யறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை முதலியன. விலக்கியன : பிறனில் விழைதல் அழுக்காறு வெஃகுதல், புறங்கூறல் முதலியன. விலக்கியனவற்றுள் அழுக்காறு ஈண்டு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

**அழுக்காறு இன்னதென்பது :**

அழுக்காறு, பொறுமை, பொய்ச்சிரிப்புஎன்பன ஒருபொருட் கிளவி. அழுக்காறென்பது பிறர் உண்மை உயர்வு கண்டு பொறுது தன் உளம் சால வருந்தலாம். இக் குணம் மிக்கதோர் குற்றமாம்.

**அழுக்காருமை இன்னதென்பது :**

அழுக்காருமை என்பது அழுக்காறு என்பதன் மறுதலை. அழுக்காருமையாவது பொருமை செய்யாமை. இனி அழுக்காருமை என்பது பிறர் உண்மை உயர்வு கண்டு அழுக்காறு கொள்ளாதிருத்தலாகும். இது தலைசிறந்த நற்குணமாகும்.

**அழுக்காற்றின் தீமை :**

அழுக்காறு உடைமை தீய ஒழுக்கத்திற்குக் காரணமாகும்; எல்லாப் பேற்றையும் இழப்பிக்கும்; இம்மைக்கண் ஆக்கத்தையும், மறுமைக்கண் அறத்தையும் இல்லையாக்கும்; இருமையும் துன்பம் தரும். அழுக்காறு உடையவன் தானே அன்றித் தன் சுற்றமும் கெட அழிவான்; அவன்பால் செய்யவள் தவ்வை போய்ப் புகுவாள்; இம்மையில் பொருள் இழந்து மறுமையில் நரகம் செல்வான். அவன் ஒருக்காலும் உயர்வுபெறுன்.

**அழுக்காருமையின் நன்மை :**

அழுக்காறு இன்மை நல்லொழுக்கத்திற்கு நெறியாகும்; எல்லாப் பேற்றினும் உயர்ந்த பேருகும்; இம்மைக்கண் ஆக்கத்தையும் மறுமைக்கண் அறத்தையும் நல்கும்; இருமையும் இன்பம் கொடுக்கும். அழுக்காறில்லாதவன்பால் செய்யவள் முகனமர்ந்து வாசஞ் செய்வாள்; ஓரோவழி அவனுக்குக் கேடு வந்துறுமேல் அஃது அறத்தால் ஆராயப்படும். அழுக்காறில்லாதவர் தம் உயர்வினின்றும் தினைத்துணையேனும் தாழார்.

**அழுக்காறு – சான்று :**

அழுக்காறு உடைமைக்கு ஒரு நல்ல சான்று இளங்குமணன். அவன் நற்பண்பு சிறிதும் இல்லா அழுக்காற்றினன். பண்டு பாற்கடலில் அமுதும் நஞ்சும் ஒருங்கு தோன்றிறைபோலக் குமணனும், இளங்குமணனும் பழந்தூங்கு முதிரத்து மலையில் ஒரு தாய் வயிற்றுள் தோன்றினர். கொடைக்கு எல்லையாகக் கொள்ளப்படும் குமணன் தன்பால் இரந்துவந்தோர்க்கு விரைந்து வரையாது கொடுத்தான. அவன் செயல் கண்டு இளையவன் அவன்மேல் அழுக்காறு கொண்டான். ஏன்? பொருளை எல்லாம் குமணன் வாரி வழங்கும்போது அதனல் அவன் பெற்ற எல்லை இல்லாத புகழைக் கண்டு உளம் வெந்தான். தன்னைப் புகழ்வார் மருந்துக்கும் இலராகவே குமணன் பால் அவனுக்குப் பொறுமை மிக்கது. ஆழ்கடல் நோக்கி இழிதரும் ஆறுகள் என்ன மக்கள் யாவரும் அவனை நோக்கிச் சென்றமை கண்டு இளங் குமணன் அழுக்காறு என்ற தீயில் வெந்தழிந்தான். அவ்வழுக்காறு என்ற பாவியின் தூண்டுதலால் தன் மூத்தோனை - உடன் பிறந்தானைக் கொல்லவும் சூழ்ந்தான்.

அவன் குறிப்பை நுண்ணிதின் அறிந்த குமணன் கடலன்ன துன்பம் கொண்டு நாட்டைத் தம்பிக்கே விட்டுத் தமியனய்க் காடு ஏகினன். 'தனக்கு அஞ்சியே குமணன் காட்டுக்குள் ஓடினன்' என மாறுபடக்கொண்டான் இளையவன். எனினும் அவன் யாண்டிருப்பினும் அது தன் வாழ்வுக்கே இறுதியாய் முடியுமெனக்கருதிக் 'குமணன் தலை கொணர்வார்க்கு வேண்டும் பரிசில் தரப்படும்' என விளம்பரப்படுத்தினன். இளங்குமணனை நல்லார் பொருட்படுத்திலர்; பெரியோர் தூற்றினர்: புலவர் பாடாதொழிந்தனர்; மக்கள் 'இவன் வாழும் நாட்டினும்; கொடும் புலி வாழும் காடு நன்று' என நவின்று உளம் சாம்பினர்.

**அழுக்காறுமைச் சான்று :**

அழுக்காற்றிற்கு இளங் குமணன் ஏற்புடைச் சான்றானது போலவே, அழுக்காறுமைக்கு ஏற்புடைச் சான்று குமணனே ஆவான். குமணன் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்நான்கும் விட்ட அறவோன். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் மிக்க சான்றோன். குமணன் காடு புக்க பின்னரும் அவன்பால் நாட்டு மக்கள் நாட்டமுடையராகி அவனுக்கு வேண்டும் யாவையும் காட்டுக்குள் கொண்டுபோயினர். அச் செம்மல் அனைத்தையும் அன்பால் மறுத்து அறவாழ்க்கை வாழுங் காலத்தில், பெருந்தலைச் சாத்தனார் வறுமையுற்று அவனை நாடிக் காட்டுள் சென்று கேட்பார் உளங்கசிந்துருகப் பாடி நின்றார். அந்நிலையில் செய்வதறியா வேந்தன் தன் தலையை அறிந்து போய் இளங்குமணனிடம் கொடுத்துப் பரிசில் பெறுகவெனத் தன் உடைவாளை எடுத்துப் புலவர் கையில் கொடுத்தான். புலவர் அவன் செயல் கண்டு மிக்கதோர் வியப்புக்கொண்டு உடன் இளங்குமணன் அவையை அணுகினார். ஆண்டு அரசிருந்த இளையவன், புலவர் கால் படாத் தன் அவையில் புலவரொருவர் கரத்தினில் வாளுடன் வந்தமை கண்டு அஞ்சி எழுந்தான். அதுபோது புலவர் அவனிடம் குமணனின் அருங் குணங்களையெலாம் உள்ளங் கொள்ளுமாறு எடுத்துரைத்து அவனை நல்வழிப்படத் தூண்டினார். இளங்குமணன் தன் மூத்தோனின் ஒப்பற்ற குணநலன்களை எண்ணிக் கண்ணீர்வடித்துத் தன் செயற்கு மிக நாணிப் புலவருடனும் அவையோருடனும் காட்டிற்குச் சென்று அவன் பேரருள் பெற்றுக் குமணனே மீண்டும் நாட்டை ஆளவேண்டுமெனக் கும்பிட்டு நின்றான். புலவரும், மேலோரும் வேண்டவே குமணன் நாடு வந்து ஆட்சி ஏற்று உலகுய்யப் புரந்தான்.

**ஒப்பு நோக்கு :**

இளங்குமணன் அழுக்காற்றால் பழிகொண்டான். குமணன் அழுக்காறு இல்லாமையால் புகழ்பெற்றான். இளையவன் குற்றப் பட்டான். மூத்தவன் குணம் பெற்றான். இளையவன் இறுதியில் அழுக்காற்றிலிருந்து விடுபட்டுத் தனக்கு உய்வு தேடிக்கொண்டான்; எனினும் இன்றும் மேலோர் அவனைப் போற்றுமாறில்லை. குமணன் குணக் குன்றாகத் திகழ்ந்தமையால் யாவரும் போற்றிக் கொள்கின்றனர். இதனால் அழுக்காறு இழிவையும், அழுக்காறுமை உயர்வையும் தரவல்லது என்பது மெய்யாம்.

**முடிவுரை :**

எனவே, இன்றைய உலகத்தில் வேரூன்றி உள்ள அழுக்காற்றினை மாந்தராவார் கைவிடுதல் நன்றாம். இன்றேல், அதன் பயன் வீயாப்பழியாய்ப் போய் முடியும். அழுக்காற்றினை விடுவோம். அழுக்காறாமையைக் கைக்கொள்ளுவோம். அவனியில் அறம் பேணி வாழ்வோம்.

" அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்."

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur.

நானும், என் வாழ்க்கைத் துணைவியாரும், மகளும், கல்லூரி ஆசிரியர்களும் இத்தலத்திற்கு 10 ம் தேதி வந்து ஆறுநாட்கள் தங்கி ஸ்ரீ அமிர்தகடேசுவரரையும், ஸ்ரீ காலசம்காரமூர்த்தியையும், ஸ்ரீ அபிராமியம்மையையும் நாள்தோறும் சேவித்துத் தங்கக் கவசங்களை அணிந்து அலங்காரத் திருக்கோலத்தைக் கண்டு களித்துப் பக்தியில் திளைப்பதற்குரிய பேற்றினை பெற்றதற்கு நாங்கள் யாவரும் இறைவனுடைய அருள் என்பதாக மகிழ்கின்றோம். இங்கு எங்கள் யாவரையும் மிக சிறப்பாகக் கவனித்து உபசரிப்பதற்கும், இங்கிருந்து பல ஸ்தலங்களைச் சேவிக்கத் தக்க ஏற்பாடுகளைச்செய்ததற்கும் அதிகாரிகள் யாவருக்கும் எங்கள் நன்றி. திரு. இராஜு சாஸ்திரி அவர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும், ஓதுவார் திரு. சிவப்பிரகாசம் அவர்களுக்கும் பக்தியோடும் திருப்தியாகவும் தெளிவாகவும் மந்திரங்களை ஜபித்து எங்கள் உள்ளங்களைப் பரவசப் படுத்தினார்கள். இவ்வளவு நாட்களும் இறைவன்பால் எங்கள் உள்ளங்களை ஈடுபடுத்தி எங்கள் பக்தியையும் வழிபாட்டையும் ஓரளவு உறுதிப் படுத்தி பெருக்கிக்கொள்வதற்கு உறுதுணையாக இருந்த ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு எங்கள் உளம் கனிந்த வணக்கங்கள். அவர்களின் வாழ்த்துக்கள் எங்களின் வாழ்க்கையினை நெறிபடுத்தத் துணை புரிய எல்லாம்வல்ல இறைவன் ஸ்ரீ அமிர்தகடேசுவரரும். ஸ்ரீ அபிராமி அம்மனும் அருள் புரிய வேண்டும்.

பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி,
தலைவர், பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி,
கோவை 14.

16—3—69.

# திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,

**வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.**

(மலர் 28, இதழ் 3, பக்கம் 134 இன் தொடர்ச்சி)

## (15) மூர்த்தி நாயனார்

" மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன் "

— திருத்தொண்டத்தொகை.

"அவந்திரி குண்டமண் ஆவதின் மாள்வனென் றன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துல காண்டவொண்
மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா புரியென்னும் நீள்பதியே "

— திருத்தொண்டர் திருவந்தாதி.

தென்பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையம்பதியில் வணிகர் குலத்தில் மூர்த்தி நாயனார் அவதரித்தார். முன்னோர் பலரும் செய்த தவத்தின் பயனாய்த் தோன்றிய மூர்த்தியார் சிவபிரான் திருவடிகளையே செல்வமாகக் கருதும் சிந்தையராய் விளங்கினார். அவனது திருவடிகளையே சுற்றமும் நட்புமெனக் கொண்டு அன்பின் திருவுருவமாய் விளங்கிய இவர் ஆலவாய் இறைவனுக்குச் சந்தனக்காப்பு அணிவிக்கும் திருத்தொண்டைச் செய்துவந்தார். எக்காரணங்கொண்டும் தம்தொண்டு முட்டுப் படாமல் செய்வதில் கருத்துடையவராயிருந்தார்.

### அயல்வேந்தர் படையெடுப்பு :

அந்நாளில் கருநாடதேசத்து மன்னன் அண்ணல் யானை அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு தென்னாட்டின்மீது படையெடுத்தான். அவனது படை பாண்டியநாடு முழுதும்

பரவின. பாண்டியனைப் போரில்முறியடித்து அந்நாட்டரசுரிமையைக் கைப்பற்றினான். மதுரை மாநகரினைத் தன் தலைநகராகக் கொண்டு காவல் புரியத் தொடங்கினான்.

### சந்தனக்கட்டை முட்டுப்பாடு :

வடுகக் கருநாட மன்னன் சமணமதச் சார்புடையவனாய் ஒழுகினான். சிவனடியார்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். மூர்த்தி நாயனாருக்குப் பல இன்னல்களைச் செய்தான். நாயனார் அவற்றைப் பொருட்படுத்தாது தாம் செய்துவந்த திருத்தொண்டில் தளராது தலைநின்றார். அதனை அறிந்த மன்னன் நாயனாருக்குச் சந்தனக்கட்டை கிடைக்காதவாறு செய்தான். அதனை அறிந்த மூர்த்தியார் திருநீற்றுச் சார்புடைய மாமன்னனை இந்நாடுபெறுவது எப்போது? என மனங்கவன்றார். பகல்முழுதும் பல இடங்களிலும் சந்தனக்கட்டைபெறத் தேடியலைந்து கிடைக்கப்பெறாமல் மிக வருந்தினார்.

### முழங்கையைத் தேய்த்தல் :

நாயனார் திருக்கோயிலை அடைந்து இன்று இறைவனுடைய திருமெய்ப்பூச்சுக்குத் தேய்த்துக்கொடுக்கச் சந்தனக்கட்டை கிடைக்கவில்லையே என வருந்தி, அக்கட்டைபோல என் முழங்கைக்குமா முட்டுப்பாடு வந்தது! இதனையே சந்தனக்கட்டை போலக் கல்லில் தேய்ப்பேன் என்று கூறிச் சந்தனக்கல்லில் தம் கையை வைத்துத் தேய்க்கத் தொடங்கினார். கைதேய்ந்து இரத்தம் பெருக்கெடுத்தது. தோலும் தசையும் எலும்பும் நரம்பும் தேய்ந்தன. அடியவர் துன்புறுவதை ஒரு சிறிதும் அனுமதியாத இறைவன், "இச்செயல் செய்யற்க! உனக்குத் தீங்கு எண்ணிய கொடுங்கோல் மன்னனின் அரசுரிமையை எய்தி உலகைகாத்து நம்பால் வருக." என்று அசரீரியாகக் கூறினான். அதனைக்கேட்ட நாயனார் தம் செயலை நிறுத்தினார். தேய்ந்த கை நலம் பெற்றது. மூர்த்தியார் சிவ ஒளிமயமானார்.

### பகையரசன் மடிதல் :

அன்றிரவே வடுகக் கருநாட மன்னன் இறந்தனன். மறுநாள் ஈமச்சடங்குகள் நடந்தன. இறந்த மன்னனுக்கு மகப்பேறில்லாததால் மன்னவனாகி அரசுரிமையை ஏற்பவர் யார் என

அமைச்சர் கூடி ஆராய்ந்தனர். முடிவில் பட்டத்து யானையின் கண்ணைக்கட்டி வீதியில் வீடுப்பது என்றும் அது யாரைத் தேர்ந்தெடுத்து வருகிறதோ அவரை மன்னராகஏற்பது என்றும் முடிவு செய்து யானையை விடுத்தனர்.

### யானை மூர்த்தியாரைத் தேர்தல் :

யானை வீதிகளைச் சுற்றிக்கொண்டு சொக்கநாதர் ஆலயத் திற்குச் சென்றது. அவ்வேளையில் மூர்த்தி நாயனர் திருக் கோயில் வாயினருகில் நின்று கொண்டிருந்தார். அவரை நெருங்கிய யானை வணங்கி அவரை எடுத்துத் தன் முதுகின்மேல் வைத்துக்கொண்டது. அதனைக்கண்ட அமைச்சர்கள் மூர்த்தி நாயனரை வணங்கி மங்கல வாழ்த்தொலிகள் செய்து அரண் மனைக்கு அழைத்துச்சென்று அரியாசனத்தில் இருத்தினர்.

### மூர்த்தியார் அரசேற்றல் :

முடிசூட்டு விழாவிற்கு வைதிகச் சடங்குகள் யாவும் நடந் தன. நாயனர் அமைச்சர்களை நோக்கி, 'அரசுரிமையை ஏற்கும் எனக்கு விபூதியே அபிடேகப் பொருள். உருத்திராக்கமே திருவாபரணம். சடைமுடியே மகுடம்கொண்டு அரசு செய் வேன்' எனக் கூறினர். முடிசூட்டுவிழா நடைபெற்றது. நாய னர் திருக்கோயிலுக்குச் சென்று சொக்கலிங்கப்பெருமானை வணங்கி யானை மீதேறி நகர்வலம் வந்து அரியணையேறி அரசு செலுத்தத் தொடங்கினர். சமணசமயம் குன்றியது. சைவம் தழைத்தது. திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி மூன்றை யும் கொண்டு அரசாண்ட மூர்த்தி நாயனரை மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனர் என எல்லோரும் போற்றினர். உட்பகை புறப்பகை யொழித்து முற்றத்துறந்த துறவியாய் உலகாண்ட மூர்த்தி நாயனர் முடிவில் இறைவன் திருவடி நிழலையடைந்து முடிவில்லாத இன்பம் எய்தினர்.

# மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

திரு. செ. சின்னத்துரை B. A.,

(மலர் 28, இதழ் 4, பக்கம் 230 இன் தொடர்ச்சி)

"மருத்துவன் உரைத்த நூலின் வழிவரின் பிணிகள்வாரா
வருத்திடும் பிணிகள் தப்பின் தப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யாது உறும்பிணி சென்றுந்தீர்ப்பன்
உரைத்தநூல் சிவனும் இன்னே உறுங்கன் மம்
ஊட்டித்தீர்ப்பான்."

வாகடநூல் வழி ஒழுகாது தப்பிய வழி ஒழுக, அங்ஙனம் ஆன் மிகத்தானும் பௌதிகத்தானும் வரும் பிணிகளை அதற்குத் தக்க மருந்துகளைக் கொடுத்தும் தைவிகத்தான் வரும் பிணிகளை அவற்றிக்குத் தக்க உபாயங்களிலே செலுத்தியும வைத்தியன் தீர்ப்பன். இவவாறு சிவபிரானும் உயிர்கட்கு வரும் இருவினைகளைப் பல திறத்தாலும் ஊட்டித்தீர்ப்பன் இறைவன் நுகர்விக்கும இன்பம் துன்பம் இரண்டும் மருந்தாவன. ஆகையால் வேதாகம முறைப்படியும் திருமுறைகள் மெய் கண்ட சாத்திரம் முதலியவற்றின் படியும் வாழ்வதே வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டிய முறையாகும். இவற்றின் வழி ஒழுகாமல் கொலை, களவு, பொய், கள், காமம் முதலிய தீய ஒழுக்கங்களை மேற்கொண்டு மக்கள் வாழவார்களானல் பாவக்குழியில் வீழ்ந்து மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து ஊசலாடுகிறதன்மையைப் பெற்றுக்கொண்டேயிருப்பார்கள். மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு இறைவன் ஆணைப் படியே நாம் நல்லவழியில் ஒழுகவேண்டும். முற்பிறப்பில் ஒருவர்செய்த நல்வினை தீவினையின்படியே இப்பிறப்பில் இன்பத் துன்பங்கள் வந்துசேரும். அவரவர் செய்த கன்மத்தை அவர வரே அனுபவிக்க வேண்டும். காலம் நியதி தத்துவங்களுக் கேற்ப அந்தந்தக் காலத்தில் நிகழவேண்டியது. மகாணியேனும் கூடாமலும் குறையாமலும் பொசிப்புக்கு ஒரு ஆன்மாவிற்கு வந்து சேரும். இறைவன் காலநியதி தத்துவங்களை இயக்க, ஆன்மா கருவி கரணங்கள் வாயிலாகத் தொழிற்படுகிறது. அவனன்றி ஒருஅணுவும் அசையாது. அவனுடைய

திருவுள்ளம் எதுவோ அதன்படியே எதுவும் நடைபெறும். முற்பிறப்பில் பிரதானமாகத் தேகம்விடும்பொழுது ஓர் ஆன்மா எதை இச்சிக்கிறதோ அந்த இச்சையைப் பூர்த்தி செய்வதற்காக அந்தப் பிறப்பிலே அந்தச் சூழலிலேயே ஆன்மாவைப் பிறவி எடுக்கச்செய்து வினையை நுகரச் செய்கிறான் மருவி எப்பொருளும் வளர்ப்போனாகிய சிவபெருமான்.

'' பேறிழவின்பமோடு பிணிமூப்புச் சாக்காடென்னும்
ஆறும்முன் கருவுட் பட்டதவ்விதி யனுபவத்தால்
ஏறிடும் முன்பு செய்த கன்மம் இங்கிவற்றிற்கேது
தேறுநீயினிச் செய்கன்மம் மேலுடற் சேருமன்றே.''

ஓர் உடம்பின் வரக்கடவனவாகிய இன்பத்துன்பங்கட்கேதுவாகிய செல்வ வறுமைகளும் அவற்றினால் வரும் உயர்வு இழிவுகளும் அவற்றாலாகிய இன்பத் துன்பங்களுமாகிய ஆறும் முன்னேதானே கிடந்தன. அப்போதைக்கப்போது உளவாவன வல்ல. அவை தூலமாய் வந்து கூடுதல் அவற்றை அனுபவித்தற்குத் துணையாகிய முயற்சியால் ஆகும். அங்ஙனம் அனுபவித்தற்குத் துணையாகிய முயற்சியும் அவ்வளவில் ஒழியாது மற்றோருடம்பிற்படும் அவ்வறுவகைக்கும் வித்தாய் நிலைபெறும். தொன்றுதொட்டு இவை அநாதியாகத் தொடர்ந்து நிகழ்பவை. இப்பேருண்மைகளை நன்குணர்ந்தே யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் தமது குரு செல்லப்பாச் சுவாமிகளின் பொன் மொழிகளாகிய, ''எப்போதோமுடிந்த காரியம்,'' 'முழுவதும் உண்மை,'' '' ஒரு பொல்லாப்புமில்லை '' என்னும் மந்திர வாக்கியங்களைத் தம்மை அண்டினோர்க்குக் கூறிவருவார். இப்பேருண்மைகளில் நாம் தெளிவான அறிவைப்பெற்று வாழ வேண்டும். எமக்கு வரவேண்டியதே வந்து சேரும். இறைவன் திருவுள்ளப்படி வரமாட்டாதது வராது. இவ்வுண்மைகளை அறியாத காரணத்தால்தான் உலகில் மாசுள்ள போட்டியும் பொறாமையும் தாண்டவமாடுகின்றன. மக்கள் உள்ளத்தில் நிம்மதியில்லை. குசேலருக்கு 27 பிள்ளைகள் இருந்தனர்; ஆனால் அவர் மனம் கலங்கினாரல்லர். அவர் ஆண்டவனிடத்தில் அளவு கடந்த பற்றுடையவர். இறைவன் அளந்த அளவுதான் கிடைக்கும் என்பதில் குசேலர் உறுதியுள்ளவர் மலையே வந்து வீழினும் வானம் துளங்கினும் ஞானிகள் நிலையில் கலங்கினாரல்லர். இறைவன் ஆணைதான் நடைபெறுகிறது. சர்வ உலகமும் சிவமயம். உலகில் உண்மைச் சமய வாழ்க்கையில்லாத

காரணத்தால்தான் அரசாங்கங்களும் குடும்பக் கட்டுப்பாட்டை ஆரம்பித்துள்ளனர். மனக்கட்டுப்பாடு, அடக்கம், நல்லொழுக்கம் நன்னெறி இவற்றை மக்களிடத்தில் பரப்ப அரசாங்கம் முயல வேண்டும். காட்டில் வாழும் மிருகங்களுக்கும், கல்லினுள் தேரைக்கும் ஆண்டவனே படி அளக்கிறார். அன்புநெறி பரவினால் மனித இனத்தில் தீமையில்லை ஆகையால் அன்பை வளர்க்க நாம் முயலவேண்டும். அன்பே சிவம். "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் - அன்பே சிவமாவது ஆரு மறிகிலார்" என்பது திருமூலர் திருவாக்கு.

" ஒழுக்கம் அன்பருள் ஆசாரம் உபசாரம் உறவுசீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல்வாய்மை
அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொடர்ச் சித்தலாதி
இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணிஅறங்கள் "

ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், குற்றமற்றதானம், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத்துறவு, மெய்யறிவு, அர்ச்சித்தல் முதலிய பதினாறு அறங்களை ஒருவர் செய்தால் நன்மை உண்டாகும். பிறவிப் பயனாகிய வீடு பேற்றை நாம் தடையிலாமல் அடையலாம்.

" மனமது நினையவாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்கு இர்சித்த தெய்வம்போற்றி
சினமுதல் அகற்றி வாழுஞ் செயலறம்ஆனால் யார்க்கும்
முனம் ஒரு தெய்வம் எங்குஞ் செயற்கு முன்னிலையாம்
அன்றே "

என்பது அருணந்தி சிவாசாரியார் திருவாக்கு. ஒழுக்கம் முதலிய நன்மைகளை உடையவனுக்குத் தீமைகளை நீக்கித் தன் கருத்திற்கியைந்ததொரு கடவுளை மனமெய் மொழிகளால் வழி பட்டு வாழும் செயலாகிய அறமும் உளதாயின் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளும் கருணைக் கடலுமாகிய எல்லாம் வல்ல சிவபெருமான் அத்தெய்வத்திடமாக நின்று அச்செயலை ஏற்றுப் பயனை உதவுவார். மாயையின் குணங்களாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலியன இல்லாத மனதோடு செய்கிற பூசனையைப் பத்திசெய் அடியரைப் பரம்பரத்துய்ப்பவராகிய சிவபெருமான் ஏற்று அருள் புரிவார். பூசு நீறுபோல் உள்ளமும் புனிதமாகவேண்டும். உள்ளம் பளிங்கைப்போல் களங்கமற்றுப் பிரகாசிக்கவேண்டும்.

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத்தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே "

என்பது திருமூலர் திருவாக்கு.

" சிந்தைதனைத் தெளிவித்து சிவமாக்கி
எனையாண்ட "

என்றார் மாணிக்கவாசகப் பெருந்தகையாரும்.

தெளிந்த உள்ளத்தில் சோதிக்குள் சோதியாய் சிவபெருமான் விளங்குவார். " அகமலால் கோயிலில்லை " என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. இறைவன் புறத்தே திருக்கோயிலினுள்ளிருக்குந் திருமேனியும் திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக்கொண்டு நின்றும் நாம் செய்யும் பூசையை ஏற்று அருள் புரிவார்.

சர்வ உலகங்களும் இறைவனின் அருள் ஆட்சியால் இயங்குகின்றன. வல்லானுகிய அவர் வகுத்தவழியே வழி. இவ் எண்ணத்தில் நாம் நிலைக்கவேண்டும். அவரிடத்திலே எம்முடைய மனதைப் பறிகொடுத்து இறைபணி நின்று வாழவேண்டும். இத்தூயநெறியில் வாழ்வதே மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழி. மறவாமையால் அமைத்த மனக்கோயிலில் இறைவனை இருத்தினல் ஞானஒளி உண்டாகும். பொய்மை ஒழியும். இன்பமே எந்நாளும் மிளிரும். " செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே." என்றார் ஞானசம்பந்தப் பெருமான்.

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது "

என்பது வள்ளுவப் பெருந்தகையார் பொன்மொழி. ஆகையால் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு இறைவன் திருவடியைப் பூசிப்போமாக.

---

## இந்தியக் குடியாட்சித் தலைவர்

## டாக்டர். ஜாஹிர் ஹுசேன் அவர்களின்

# மறைவு

நம் இந்தியப் பேரரசின் தலைவராக இருந்து பாரதநாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாய்த் திகழ்ந்த டாக்டர். ஜாஹிர் ஹுசேன் அவர்களின் மறைவு, பாரதமக்களைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. டாக்டர். ஜாஹிர் ஹுசேன் அவர்கள் இளமை முதலே சுதந்திர வேட்கையுடையவராய் நம் நாட்டின் விடுதலைக்கு அரும்பணி பலபுரிந்தார். அண்ணல் காந்தியடிகள் வகுத்த அறவழியையே, தம் வாழ்க்கை வழியாகக் கொண்டு தொண்டு மனப்பான்மையுடன் விளங்கினார். காந்தியடிகளின் ஆதாரக் கல்வி முறையை ஜமியா மிலியா சர்வகலாசாலையின் மூலம்பரப்பி, கல்வியில் ஒரு புது திருப்பத்தை இவர் உண்டாக்கினார். இவரது தலைமை இந்தியநாட்டின் ஒற்றுமைப் பண்பை வளர்த்தது. சிறந்த நாட்டுத்தொண்டராகிய இவர் கலையார்வம் மிக்கவராகவும் விளங்கினார். அயல்நாடுகள் பலவற்றிலும் இந்தியப் பண்பாட்டின் சிறப்பை அறிந்து போற்றச்செய்தார். இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் இவர் கலந்துகொண்டு சிறப்பித்தது தமிழ்மக்களின் உள்ளங்களைக் களிப்படையச்செய்தது. ஜமியா மிலியா சர்வகலாசாலையின் அருகிலேயே தம் சமாதி அமையவேண்டுமென்று இவர் விரும்பியதும் அவ்விருப்பம் அவ்வாறே பலரால் நிறைவேற்றப் பெற்றதும் குறிப்பிடத்தக்கவை. இவரது மறைவு ஈடுசெய்ய முடியாதது. இவரது ஆன்மா அமைதி உறுவதாக.

உ

குருபாதம்

ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

## சிறப்புத் திருநாள் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 27—5—69 | செவ்வாய் | துவஜாரோகணம். |
| 31—5—69 | சனி | சகோபுர ரிஷப வாகனக் காட்சி. |
| 2—6—69 | திங்கள் | திருக்கல்யாணம்<br>வெள்ளி ரதக் காட்சி. |
| 4—6—69 | புதன் | திருத்தேர். |
| 5—6—69 | வியாழன் | காவிரியில் பஞ்சமூர்த்திகள்<br>தீர்த்தம் கொடுத்தல்;<br>துவஜாவரோகணம். |

❋

5—6—69 வியாழக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள்

## குருபூஜை விழா

❋

6—6—69 வெள்ளிக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின்

## பட்டணப்பிரவேசம்

❋

27—5—69 முதல் 6—6—69 முடிய

## திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# சிவபெருமான்

---

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவமாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னுதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத்தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

---

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணுளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

( சம்பந்த சரணலயர் )



உ

குருபாதம்

## ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிழற்குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குருபீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு நிகழும் சௌம்ய ஆண்டு வைகாசித் திங்கள் 14உ நாள் (27—5—1969) செவ்வாய்க்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

இந்நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்

தருமையாதீன
மடாலயம்
சௌம்ய-சித்திரை

**சொக்கநாதத் தம்பிரான்.**

---

ஆதீன மடாலய திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-மணி முதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும் பூசை மடத்தில் காலை 10-மணி முதல் சித்தாந்தப் பாட வகுப்பும் நடைபெறும்.

# ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில், சைவ வேளாளர் மரபில், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனுட்சியம்மை என்னும் பெற்ருேர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுபதினத்தில் தோன்றினுர். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினுர். பெற்ருேர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் '**உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே**' என்று சொல்லிப் பெற்ருேருடன் ஊர் திரும்ப மறுத்து, மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்ருமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்ருமரைத் தீர்த்தக்கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைத்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்ந்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினுர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னுல் பூஜிக்கப்பெற்றுவந்த நாம், பூஜைப் பெட்டகத்துடன் பொற்ருமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்ருேம்; மூழ்கிப் பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்ருமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று, ஆனந்தபரவசம் உற்ருர். பின், சொக்கநாதர் சந்நிதியில் சென்று, 'பெருமானே, கண்ணுக்கினிய பெருமானுய் என் கரத்தில் வந்த உன்னைப் பூஜிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்' என்று வேண்டினுர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, '**திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானுபதேசமும், சிவபூஜையும்** பெறுக' என்று பணித்தருளி, ஞானப்ரகாசரது கனவிலும் சென்று, 'உன்னிடம்

வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவ ஞானோபதேசம் செய்து சிவபூஜையும் எழுந்தருளப் பண்ணிவைப்பாயாக' என்று சொல்லி மறைந்தருளினார்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திருமுன்பு சீடரின்வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கி யிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர் வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினார். அவர் நாள்தோறும் சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒரு நாள், ஞானப் பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன் ஆங்கு இல்லாமை கண்டு, ஞான சம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க' என்று சொல்லி உட்சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது; ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடி வரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றார். சீடர்,

" கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படி ஆக உரைத்தருளே "

என்று வேண்டினார். அதுகேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப்பணித்தருளினார்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினார்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச்செய் தருளினார். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரியமூர்த்திகள்.

# திருநாள் விபரம்

| தமிழ் ஷூ மீ௳ | இங்கிலீஷ் ஷூ மீ௳ | வாரம் | திரு நாள் | உற்சவ விபரம் |
|---|---|---|---|---|
| வைகாசிமீ 13 | 26—5—69 | சோமவாரம் | | காலை கணபதி ஹோமம். உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 30-00 நாழிகைக்கு மேல் 35-00 நாழிகைக்குள் (மாலை மணி 6 to இரவு 8) விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை. விக்னேசுவரபூஜை. வாஸ்து சாந்தி. மிருத்ஸங்கிரஹணம். அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். |
| 14 | 27—5—69 | மங்களவாரம் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 8 நாழிகைக்குமேல் 10 நாழிகைக்குள் (காலை மணி 9-12 to 10) கடக லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| 15 | 28—5—69 | புதவாரம் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 16 | 29—5—69 | குருவாரம் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி. |

ஸ்ரீ சௌமிய

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 30—5—69 | சுக்கிரவாரம் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக்காட்சி. |
| 18 | 31—5—69 | ஸ்திரவாரம் | 5 | சகோபுர ரிஷப வாகனக்காட்சி. |
| 19 | 1—6—69 | பானுவாரம் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி. |
| 20 | 2—6—69 | சோமவாரம் | 7 | இரவு மணி 7-30 க்குமேல் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம், வெள்ளிரதக்காட்சி. |
| 21 | 3—6—69 | மங்களவாரம் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக்காட்சி. |
| 22 | 4—6—69 | புதவாரம் | 9 | காலை (மணி 6-30 to 9-00) மிதுன லக்னத்தில் மஹாரதாரோகணம்; திருத்தேர். |
| 23 | 5—6—69 | குருவாரம் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம். |
| 24 | 6—6—69 | சுக்கிரவாரம் | | மௌன உற்சவம். |
| 25 | 7—6—69 | ஸ்திரவாரம் | | சண்டேசுரர் உற்சவம். |

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

ஏழாந் திருநாள்



திருக்கல்யாண வைபவக் காட்சி

## திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

குருபூஜை விழாவை யொட்டி நிகழும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின், மாண்புமிகு அமைச்சர்களும், அறிஞர்கள் பலரும் கலந்து கொள்கின்றார்கள். மேலும் நாள்தோறும் சிறந்த இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.